# 49. வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் அவர்களின் தமிழ்த்தொண்டு (தனிக்கவித் திரட்டு)



**முனைவர் க. கலாவதி**
உதவிப்பேராசியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்
கோவை - 43.

பிறந்தநாடும் பேசும் மொழியும் போற்றப்பட வேண்டியவை. மொழி விழிபோன்றது. அதனைக் காப்பதும், வளரச்செய்வதும் நமது முதற்கடமையாகும். தமிழ்மொழி வளச்சிக்காக எழுத்து, கல்வி, இதழ்கள், பதிப்பகம் வாயிலாகத் தொண்டு செய்தவர்கள் காலத்தால் மறக்க முடியாதவர்கள். அவ்வகையில் தமிழுக்குத் தொண்டாற்றிய சான்றோர்களில் குறிப்பிடத்தக்கவர் வெ. சு. முதலியார். தமிழர்கள் பலரும் தாய்மொழியை வெறுத்துப் புறக்கணித்து வேற்றுமொழியைக் கற்க விழைந்தபோது சுப்பிரமணிய முதலியார் அவர்கள் மட்டும் தமிழ் மொழியில் தேர்ந்த புலமை வாய்ந்தவராய்த் தம்போன்ற மாணவரும் மற்றவரும் தமிழின் இனிமை, அருமை, பெருமைகளை அறிந்து மதிக்கும்படி செய்து வந்தார்கள். செவ்விய செய்யுளியற்றும் வன்மை கைவரப்பெற்று எவ்வகைப் பாவையும் இனிமையாகப் பாடும் திறமை உடையவராய் விளங்கினார். பாலன், குமாரன், விருத்தப் பருவங்களில் இவரது அரிய முயற்சியில் முகிழ்த்ததே தனிக்கவித் திரட்டு என்னும் நூலாகும். முதலியார் அவர்களின் கவித்திறனையும், வள்ளல் தன்மையையும் போற்றிப் புகழ்கிறார் கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்,

> ***"எண்பது ஆண்டான இளைஞனே இன்னமுதப்***
> ***பண்பெலாங் காட்டுதமிழ்ப் பாவலனே - நண்பனே***
> ***வெள்ளக்கால் செல்வனே வேள் சுப்பிரமணிய***
> ***வள்ளலே வாழ்க மகிழ்ந்து"***

இந்த தனிக்கவித் திரட்டில் 343 பாடல்கள் அடங்கியிருக்கின்றன அவற்றுள் 113 கவிகள் திரிபு, யமகம், சிலேடை முதலிய சொல்லணி வகையைச் சேர்ந்தவையாக அமைந்துள்ளன. இக்கவித் திரட்டிலுள்ள பாட்டுக்களில் பெரும்பான்மையானவை அரை நூற்றாண்டுக்கு முன் இயற்றப்பட்டவை.

இலக்கிய நயம் ஒன்றோ, பலவோ இல்லாத வெறும்பாட்டு மருந்துக்கும் கிடையாது என்பது இதனைப் படிப்பவர்கள்



உணர்வார்கள். பொருளுணர்ச்சியுடன் இந்நூலில் உள்ள கவிகளைப் படிக்கும் போதும், கேட்கும்போதும்,

> ***"சென்று செவியளக்கும் தன்மையவாய்ச் சிந்தையுளே***
> ***நின்(று) அளவில் இன்பம் நிறைக்கும்"***

இயல்புடையது என்பது தெரியவரும். இத்தகு சிறப்பு வாய்ந்த தனிக்கவித் திரட்டின் ஆசிரியரான சுப்பிரமணிய முதலியார் அவர்களின் தமிழ்த்தொண்டு ஆய்வுப்பொருளாக அமைகின்றது.

இறைவழிபாடு அக்காலம் முதல் இக்காலம்வரை ஒவ்வொரு மதத்தினருக்கும் வெவ்வேறான கடவுள் வணக்கத்திலே அமைந்துள்ளது. அந்தந்த மதத்தினர் தங்கள் கடவுளே சிறந்தவரென்றும் உயர்ந்தவரென்றும் வாதிடும் வழக்கம் இன்றும் உலகிடை நிலவி வருகின்றது. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பே எல்லா நாட்டினர்க்கும், எவ்வெவ் இனத்தினருக்கும், அனைத்து மதத்தினருக்கும், ஆண் பெண் இருபாலர்க்கும் ஏற்ற பிரார்த்தனையைப் பாடியவர் சுப்பிரமணிய முதலியார். ஒவ்வொருவரும் இறைவனை வேண்டும் வழியை இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

> ***"அறமுறை திறம்பி அறஞ் செயேனாக***
> ***அறநெறி வழிஇப் பொருள் ஆக்கேனாக***
> ***நல்லோர் இணக்கமே நான் இணங்கிடுக***
> ***நல்லோர் நினைவே நான் நினைத்திடுக***
> ***நல்லோர் உரையே நான் உரைத்திடுக***
> ***உயிர்களை வருத்தல் ஒழிவேனாக***
> ***உயிர்போம் எனினும் மெய் உரைப்பேனாக***
> ***களவினைக் கனவிலும் கருதேனாக***
> ***உயிரினும் மானம் ஓம்புவேனாக***
> ***அயலவர் பொருளை அவாவேனாக***
> ***வாழ்வுவரின் இறுமாந்தி டேனாக***
> ***தாழ்வுறு மெனின் மனந்தளர்ந்திடேனாக***
> ***எவ்வுயிர் துன்புறக் காணினும் இரங்கி***
> ***அவ்வுயிர்க்கு உதவி ஆற்றுவேனாக"***

இப்பாடல் பல்சமய வழிபாட்டுக்குரியதாக அமைந்திருப்பது இக்கவித்திரட்டின் சிறப்பம்சமாகும்.

## மொழிப்பற்று

தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்ற மகாகவியின் வாக்கு தமிழுக்குச் சிறப்பைக் கொடுக்கும் வாசகமாகும். தமிழ்மீது பற்றுக்கொண்ட முதலியாரும்,

> ***"தம்தாய் போற்றாய் இல்லை தம்தாய்மொழி***
> ***எனத் தமக்காம்மொழி எம்மொழியும் இலை"***

எனும் பாடலடிகளில் தாய்மொழியைப் பேணிவளர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## அறச்சிந்தனைகள்

### நடுவுநிலைமை

பகைவர், அயலோர், நண்பர் எனப் பகுத்துப் பார்த்து ஒருதலை சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மைதரக்கூடிய நடுவுநிலைமை என்னும் தகுதியாகும். சமன்செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்து நியாயம் கூறவேண்டும்.

*"ஆள்வார் முறை பிறழாமே ஆள்க*
*நீதிபதிகள் நெறியில் நின்று*
*பேதமின்றி நீதி செய்க"*

என்றும்,

*"விண்ணிடிந்து விழுந்திடு மாயினும்*
*மண்ணில் நீதி வழங்கக் கடவதே"* (பா: 92)

என்றும் எடுத்துரைத்துள்ளார் ஆசிரியர்.

### வாய்மை

பொய் இல்லாமல் வாழ்வது போன்ற புகழ்மிக்க வாழ்வு வேறு எதுவுமில்லை. நீங்காத அறவழி நலன்களை அளிப்பது அந்த வாழ்வேயாகும். அகத்தின் இருளைப் போக்கும் பொய்யாமை எனும் விளக்கே ஒருவனை உயர்ந்தோன் எனக்காட்டும் ஒளிமிக்க விளக்காகும். வாய்மையின் சிறப்பினை,

*"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்"* (குறள்: 291)

இவ்வாறு எடுத்துரைக்கின்றார் வள்ளுவர். இத்தகைய வாய்மையின் சிறப்பினை,

*"என்னை எவரும் இகழினும் புகழினும்*
*செல்வம் என்னைச் சேரினும் தீரினும்*
*இன்றே இறக்கினும் என்றும் இருக்கினும்*
*எவ்வெவ் இன்பையும் எய்துதற் கெனினும்*
*உண்மை வழுவி ஒழுகே னாக*
*உள்ளின் தன்மை உண்மையே ஆக*
*வாயின் தன்மை வாய்மையே ஆக*
*மெய்யின் தன்மை மெய்ம்மையே ஆக*
*எண்ணம் சொல் செயல்யாவும் மெய் ஆக*
*உண்மையும் தோற்றமும் ஒன்றே ஆக"*

இப்பாவடிகள் மூலம் பாமரரும் புரிந்து கொள்ளும் வடிவில் தெள்ளுத்தமிழில் தெளிவுற எடுத்தியம்பியுள்ளார்.

### முயற்சி

ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கை வளமான ஒளிமயமான வாழ்க்கையாக அமைய வேண்டுமானால் முயற்சியுடையவராக



இருத்தல் வேண்டும். குலம் சிறக்க வேண்டுமானால் சோம்பலை ஒழித்து ஊக்கத்துடன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தேனீக்களின் முயற்சிக்கும், சுறுசுறுப்பிற்கும் எதனையும் ஒப்பிட்டு கூற இயலாது. சிலந்தியானது வலைபின்னும் முயற்சியில் தோற்றாலும் மீண்டும் முயன்று வெற்றியை அடையும். இதுவே முயற்சியின் உயர்ச்சியாகும்.

*"சோம்பல் எதையும் செயற்கரிதாக்கும்*
*சுறுசுறுப் பெ·்தையும் செய்யளளி*
*தாம்படி செய்திடும் ஆதலாற் சோம்பல்*
*அகற்றி முயற்சி அடைவீரே"* (பா: 41-44)

இவ்வாறு ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

### ஒழுக்கத்தின் மேன்மை

ஒருவர்க்கு உயர்வு தரக்கூடியது ஒழுக்கம் என்பதால் அந்த ஒழுக்கத்தை உயிரைவிட மேலானதாகப் போற்ற வேண்டும். ஒருவனுக்கு சிறப்பளிப்பது பிறப்பன்று. அவனது அறிவும் ஒழுக்கமுமே சிறப்பளித்து உயர்வை அளிக்கும்.

*"நல்லொழுக் கத்துடன் வாழ்தலே நீடித்த*
*நல்வாழ்க்கை யாகும் நடைபிறழ்ந்த*
*புல்லொழுக்கம் உடையோர் நீடுவாழ்ந்தாலும்*
*பொன்றி னவர்களே என்றறிவீர்"* (பா: 49)

இப்பாடல் ஒழுக்கமில்லார் இவ்வுலகில் வளமாக வாழ்ந்தாலும் அவர்கள் இறந்தோர்க்குச் சமமாகக் கருதப்படுவர் என்னும் அரிய நீதியை விளக்கி நிற்கின்றது.

### பொருட்சிறப்பு

*"எல்லாமும் வல்லவை என்ற பொருள்கள்*
*இரண்டே அவைகள் எவைகளெனில்*
*பல்லாயிரம் அண்ட மெல்லாம் படைத்த*
*பரம்பொருள் ஒன்று பணம் ஒன்றே"* (பா:82)

என்று பணத்தின் சிறப்பினை இறைவனோடு ஒப்பிட்டுக் கூறுவது இங்கு நோக்கத்தக்கதாகும்.

### உபகார வாழ்க்கை உயர்வான வாழ்க்கை

தேவைப்படும் காலத்தில் செய்யப்படும் உதவி சிறிதளவாக இருந்தாலும் அது உலகத்தைவிட பெரிதாக மதிக்கப்படும்.

*"எவ்விடத்தும் எக்குலத்தும் எச்சமயத்தினில்*
*எய்தினாலும் தனக்கும் பிறர்க்கும்*
*செய் உபகாரமாய் வாழ்பவனே உயர்*
*சீருடையான் இந்தப் பாரிடையே"* (பா: 55)

இப்பாடல் கைம்மாறு கருதாமல் பிறர்க்கு உதவிசெய்து வாழ்பவனே

உயர்ந்தோன் ஆவான் என்னும் கருத்தை விளக்கி நிற்கின்றது.

## பரத்தையர் நட்பை விலக்கல்

*"பாரில் நஞ்சுண்டவர் தம்மையே கொல்லும்*
*பரத்தைய ராகிய பாழ்நஞ்சு*
*நேரிலே கண்டாலும் நெஞ்சால் நினைத்தாலும்*
*நிச்சயமாய்க் கொல்லு மிச்சகத்தே"*

*"போரில்முன் வைத்தகால் பின்வையாதே நின்று*
*போர்செய்வோர் வெல்வார் பொதுமாதர்*
*நேரினில் நில்லாமல் ஓடுபவர்களே*
*நிச்சயம் வெல்வார் மீதே"* (பா: 72, 73)

என்னும் இவ்விரு பாடல்களும் பரத்தையர் நட்பை ஏன் விலக்க வேண்டும் என்பதற்கு அரிய சான்றாக விளங்குகின்றன.

செல்வமென்பது சிந்தையின் நிறைவே என்றும், நல்லன நூதனமானாலும் நல்லதே அல்லது பூர்வீகமானாலும் பொல்லாததே என்றும், புத்தகசாலை, கல்விச்சாலை, விளையாட்டுக்குரிய தானம், சோலை, வைத்தியசாலைகள் போன்றவற்றை உண்டுபண்ணுதல் தருமமாகும் என்றும் பல அரிய அறக்கருத்துக்களையும் குறிப்பிட்டுள்ளார்.

## நிறைவாக

*"துன்பம் எவ்வுயிரையும் துன்னா தொழிக*
*பகையும் துயரும் பயமும் நீங்கி*
*எல்லா உயிர்களும் இன்பம் எய்தும்*
*அனைத் துயிர்களும் மனஅமைதியை அடைக*
*அறிவைப் பெருக்கலால் அருஞ்செயல் செயலால்*
*பெறுதற் குரியநற் பேறுகளெல்லாம்*
*யாவரும் எய்தி இன்புடன் வாழ்க"*

போன்ற, மக்களின் நல்வாழ்விற்கு வேண்டிய பல சீரிய கருத்துக்களை சுப்பிரமணிய முதலியார் அவர்களின் தனிக்கவித் திரட்டு தாங்கி நிற்பதை நம்மால் அறிய முடிகின்றது.